விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங் களுக் கமைய கிராமங்களிலும் நகரங் களிலும் சேவை செய் வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 7 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 100) 1970 மார்ச் | இதழ் 6


சத்தியம்எப்படிக்

கடவுளோ

அப்படி

அகிம்சையும்

கடவுள்தான்



இந்த ஓவியம் காந்திஜீயின் 1927 நவம்பர் யாழ்ப்

பாணம் விஜயத்தை நினைவூட்டுகிறது.

# செயல்வீரம் வேண்டும்

தத்துவங்கள் செயல்களாகி வாழ்க்கையோடுஒன்றித் நுச்சீரணியாதபோது அவை வெறும் கருத்துப் பொருளாக காட்சிப்பொருளாக, அறிவு நுணுக்கத்தின் அடையாளப் பொருளாக ஏடுகளிலே கொலுவிருக்கும். அவை சமய தத்துவங்களாயினுமாக; அரசியல் தத்து வங்களாயினுமாக; சமூகவியல் சார்ந்த தத்து வங்களாயினுமாக.

காந்தீயக் கொள்கைகளுக்கும் இக்கதிநேரிடுமோ என அஞ்சவேண்டியிருக்கிறதுஎனெனில்காந்தியண்ணலைத் தெய்வீகநிலைக்கு உயர்த்திஎழுத்தாலும் சொல்லாலும் துதிபாடக் கற்றோமேயன்றி, அவர் காட்டிய கொள்கைகளைச் செயற்படுதக் கற்கவில்லை.

காந்தீயக் கொள்கைகள் செயல் என்னும் உரைகல்லிலே அவரால் மாற்றுக் காணப்பட்டவை. உண்மைத் தொண்டர் களினால் செயலாக்கப்பட்டவை; எந்த மனிதனும் செயற்படுத்தக்கூடிய எளியவை.

காந்தீயக் கொள்கைகளைச் செயற்படுத்த முடியவில்லையென்றால், இந்த மனி தகுலம் வேறெந்த உயரிய கொள்கைகளையும்செயற்படுத்தமுடியாதஅளவுக்கு வலிமையிழந்து விட்ட தென்றே கருத வேண்டும்.

இன்று எங்களிடையே அவர்காட்டிய தீண்டாமைக் கொள்கை செயலாயிற்று? உழைப்புக்கொள்கை செயலாயிற்று? இப்படி எத்தனை எத்தனையோ செயலாயினவா? எனவே, எம்மில் வீரம் பிறக்க வேண்டும்; அந்த வீரத்துக்குப் பெயர் செயல் வீரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திகீதம்

இலங்கை காந்தி நூற்றாண்டு விழாக்குழு நடத்திய காந்தி கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை.

பல்லவி

நாதம் எழுந்திடும் நாமஞ் சொன்னால் — எந்த
நாடும் அறிந்திடும் காந்தியென்றால் (நாத)

அநுபல்லவி

பேதம் அழிந்திடும் போதனையால் — உயர்
பெற்றியுற்றான் மக்கள் பற்றையுற்றான்

சரணம்

நீதி நிறைந்திடும் ஜோதியென்பார்
நேர்மை நிலைத்திடும் நெஞ்சனென்பார்
சாதி வெறியினைத் தகர்த்திடவே வந்த
சாந்த சொரூபனே காந்தி யென்பார் (நாத)


ஆதிக்கம் தனையென்றும் வெறுத்து நின்றான்
அன்பும் அகிம்சையும் ஆண்டுகொண்டான்
சாதிக்குந் தன்மையில் வெற்றி கண்டான் நல்ல
சக்திகொண்டானுண்மைப்பக்தி கொண்டான் (நாத)

மேதை யெனும் புகழ் மேவிநின்றான்
மெய்ம்மை நிலையை விளங்க வைத்தான்
பாதை அமைத்தனன் பார்சிறந்தோங்கிட
பற்றி நடந்து நாம் பயன் பெறுவோம் (நாத)

அரியாலையூர் — வி. ஐயாத்துரை

# சர்வோதயம்

## வினோபாஜீவிளக்கம்




அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது சர்வோதய மகாநாட்டுக்கு ஆச்சார்ய வினோபாஜீ ஒரு செய்தி அனுப்பி இருந்தார் அச் செய்தி வருமாறு:

தங்களது இரண்டாவது சர்வோதய சம்மேளனம் நடக்கப் போகிறதென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சர்வோதய சித்தாந்தம், எல்லாத் தேசங்களுக்கும், எல்லாக்காலத்திலும் சமமாகப் பொருந்துவதொன்று. தனி மனிதன் தன் சேவை முழுவதையும் சமுதாயத்திற்குச் சமர்ப்பணம் செய்வானாக! தனி மனிதனது மலர்ச்சிக்குச் சமுதாயம் பூரண வாய்ப்பளிக்குமாக! சமுதாயத்தில் ஒருவரும் துன்பப்படாமலிருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் சிந்திப் பார்களாக! பிறரது சுகத்தில் சுகமும், பிறரது துயரத்தில் துயரமும் கொள்ளுதல் சர்வோதய வழிமுறையாகும்.

ஆதாரம்: ஈழகேசரி. 4.12.55

# அறக்கலசம்

காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டி இலங்கைக்கு வருகைதந்த தவத்திரு குன்றக்குடி அடிகள் ''சீரிய ஒழுக்கம்'' என்னும் பொருள்பற்றிச் சிறந்த சொற்பொழிவொன்று ஆற்றினார். அன்னார் ''அறக்கலசத்தில்'' ஒரு பிடி அரிசியும் காசுமிட்டு, சர்வோதயம் என்னும் அறப்பணியைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து மாணவரும் மனமுவந்து தம்மாலியன்றதைக் கொடுத்தனர். ஒவ்வொரு மாதத்திலும் முதல் வாரத்தில் இந்த ''அறக்கொடை'' தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வாறு சேர்ந்த அரிசியும் காசும் காந்தி சேவா சங்க அநாதர் நிலையத்துக்கு அனுப்பப்படுகின்றன.

[கொழும்பு, பம்பலப்பிட்டி—இந்துகனிஷ்ட பாடசாலை பரிசளிப்பு விழா அறிக்கை 4.3.1970]


# தமிழகம்


திங்கள் இருமுறை இதழ்
சிறப்பாசிரியர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தனியிதழ் ; 25 சதம்
ஆண்டுக்கட்டணம்: ரூபா 5 00
தகவல்கட்கு;
மேலாளர்,
''தமிழகம்''
66.அ. தெற்காவணி மூலவீதி,
மதுரை-1.
தமிழ் நாடு
இலங்கையில்,
காந்தி நிலையம்
உருத்திரபுரம்



காந்தீயம்

ஆண்டுக்கட்டணம் ரூபா 2.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காந்தி நூற்ருண்டு விழாவை யொட்டி ஸ்ரீ ஜயபிரகாஸ் நாராயன் தம்பதிகள் இலங்கைக்கு வருகை தந்த போது கொழும்பு, பம்பலப்பிட்டி—சரஸ்வதி மண்டப்பத்தில் நடைபெற்ற காந்திவிழாவில் ஸ்ரீமதி ஜயபிரகாஸ் நாராயன் சர்வோதய பாத்திரத்தை இராச்சிய விவகார அமைச்சர் கௌரவ ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களிடம் அளிக்கிருர்.

# இலங்கையில் சர்வோதய மகாநாடு

1952 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், நீர்வேலியில் முதலாவது சர்வோதய மகாநாடு நடைபெற்றது. இம் மகா நாட்டிற்கு ஸ்ரீ சங்கரராவ் தேவ் ஜீ, சர்தார் அ. வேதரத்தினம் பிள்ளை, ஸ்ரீ நா. ராமஸ்வாமி ஆகியோர் பாரத நாட்டிலிருந்து வந்து பங்கு பற்றிக் கருத்துரை வழங்கினுர்கள்.

1955 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், பண்ணுகத்தில் நடைபெற்ற சர்வோதய மகாநாட்டுக்கு பாரதத்திலிருந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் சமுகமளித்து கருத்துரை வழங்கினுர்கள். இம் மகா நாட்டுக்கு வரவிருந்த ஓமந்தூர் பி. ராமஸ்வாமி ரெட்டியார், ஸ்ரீ வல்லபஸ்வாமி ஆகியோர் தொற்று நோய் பாதுகாப்பை முன்னிட்டு ஊசி போடவும் அம்மைப்பால் கட்டவும் விரும்பாததினுல் இலங்கைக்கு வர முடியாமல் போய்விட்ட தென்பது குறிப்பிடத்தக்கது.

1967 ஆம் ஆண்டு கொழும்பு, குளியாப்பிட்டி நெதலகமுவவில் நடைபெற்ற சர்வோதயமகாநாட்டிற்கு பாரதத்திலிருந்து ஸ்ரீ ஆர். ஆர். திவாகர், ஸ்ரீ ஜவகர் ஜெயின், திரு கே. சுவாமிநாதன், திரு எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் சமூகமளித்துக் கருத்துரை வழங்கினுர்கள்.

வருகிற ஆகஸ்ட்மாதம் நடைபெறவிருக்கும். சர்வோதய மகாநாட்டுக்கு பாரதநாட்டிலிருந்து குஜராத்மாகாணகவர்னர் மேன்மைதங்கிய ஸ்ரீ மந்நாராயண், ஸ்ரீ ராதாகிருஷ்ணு, ஸ்ரீ நாராயண்தேசாய், ஸ்ரீ சுப்பாராவ், திரு. ச. ஜகந்நாதன், திரு. கே. அருணுசலம் ஆகியோரை அகில இலங்கைக் காந்திசேவாசங்கம்அழைத்துள்ளது.

இம் மகா நாட்டுக்கு சமூகமளித்துச் சிறப்பிக்குமாறு ஆச்சார்ய வினேபாஜீயை அழைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகிற தென்பதும் குறிப்பிடத் தக்கது.

# இலங்கை வேலைகள்பற்றி வினேபாஜியின் மகிழ்ச்சி

மதுரை அகிம்சைப் பள்ளி இயக்குனரும் கதர் இயக்கப் பிரசாரகருமான திரு. ஏ. என். ராஜன் அவர்கள் தனது இலங்கை சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு அண்மையில் இந்தியா திரும்பியகையுடன் வடஇந்தியா விலுள்ள கோபுரியில் வினேபாஜீயைச் சந்தித்தார். அவர்களின் உரையாடலில் இலங்கையும் இடம்பெற்றது. இதுபற்றி திரு.ராஜன் பின்வரும் செய்தியைக் காந்தீயத்திற்கு அனுப்பி உள்ளார்.

இன்று காலை 11 மணிக்கு மேல் கோபுரியில் வினேபாஜீயைக் கண்டு இலங்கையில், காந்தி சேவா சங்கமும் இலங்கை நூற்ருண்டு விழாக் குழுவினரும் கதர் உற்பத்திக்கு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள், சர்வோதய பாத்திரம், பூதான்வேலைகள் பற்றி விளக்கினேன். கிராமதானம் (கிராம சுயராஜ்யவேலை) அங்கு நடைபெறவேண்டு மென்ருர். கதர் உற்பத்தியோடு கூட சர்வோதய பிரசாரம் வலியுறும் போது கிராமசுயராஜ்யக்கருத்தும் கூடபரவும் என்றும் —சர்வோதய பாத்திரத்தின் மூலம் சிறிது வேலைநடை பெறுவது பற்றியும் கூறினேன். ஆசிகள் தந்தார். மேலும் ஊக்கம் காட்டக் கோரினுர். அவருக்கு மிகுந்த சந்தோஷம்.

ஏ. என். ராஜன்
கோபுரி
11. 3. 70

**வாசித்துவிட்டீர்களா**

**பனையும் பயனும் ரூ. 2**

**இனிக்கும் பதநீர் ரூ. 2**

விபரங்களுக்கு-
காந்தி நிலையம்.
உருத்திரபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 100
1970 மார்ச்

# உலகஇம்சைமாறவழி

உலகமெங்கும் கலகங்களும் குழப்பங்களும் இடையருது நடந்து கொண்டு வருகின்றன; பெருகியும் வருகின்றன, நாடுகளிடை நடைபெறும் போர்கள் இந்தத் தனிப்பட்ட குழப்பங்களின் கடைசிக் கட்டமென அறிந்து கொள்ள வேண்டும்.

மாணவர்களிடையும் தொழிலாளர்களிடையும் உலகமெங்கும் அமைதியின்மையையும் புரட்சிப் போக்கையும் காண்கின்றேம். அமைதியின்மையும் குழப்பங்களும் இறுதியில் நினைக்கமுடியாத இம்சைக்கு வழி கோலிவிடுவதையும் நாம் காண்கிறேம். அமைதியின்மை, குழப்பம், இம்சை இவை தோன்றுவதற்கு மூலகாரணமென்ன? அமைதியின்மையிலிருந்து குழப்பமும் குழப்பத்திலிருந்து இம்சையும் தோன்றுவதை நாம் ஊகித்தறிந்து கொள்ளலாம்.

அமைதியின்மை சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் ஒரு சாரார் பிறிதொரு சாராருக்கு எதிராகச் செய்யும் கொடுமைகளிலிருந்துமே தோன்றுகிறது. ஏற்றத் தாழ்வுகள் சென்ற காலச் சமூக அமைப்புக்களிலிருந்தும் தோன்றின; நிகழ்காலத்திலே சுயநலக்காரர்களின் சூழ்ச்சியினுலும் பிறர் பால் அணுவளவேனும் கருணை காட்டாத வஞ்சகத்தினுலும் தோன்றின. சமூகத்தில் சிலர் தம்முடன் மற்றையவர் சமமாக இருப்பதை ஒரு பொழுதும் விரும்புவதில்லை. தாம் கடைப்பிடிக்கும் தொழில் முயற்சி, உத்தியோகம், சமயக் கொள்கை முதலியன சில வேளைகளில் எவ்வளவில் மனித சமூகத்தில் அநியாயத்தை விளைவிக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. இது அறியாமையால் வரும் தீமை. இன்னும் சிலரோ அறிவு அறிந்தே மற்றைய வரைத்தம்முடன் சமமாக வாழ விடாது தடுக்க எல்லாவழிவகைகளையும் கையாள்வர்

இவ் இருவகையாலும் வரும் சமூக ஏற்றத்தாழ்வை நீக்க உழைப்பது மனிதர் யாவருக்குமாய பொதுக் கடமை. பொது உடைமை எவ்வாறு முக்கியமோ அவ்வாறு பொதுக் கடமையும் முக்கியம். இவ்விடத்தில் தான் மகாத்மா காந்தியின் போதனைகளும் சர்வோதயமும் நமக்கு வழி காட்டுகின்றன.

சமூகத்தில் அநீதி உண்டு அமைதியின்மை உண்டு என்பதை உலகம் அறியும். ஆனல் அவற்றை அகற்றுதற்கு என்ன வழியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் தான் அபிப்பிராய பேதமுண்டு.

சமூகஏற்றத்தாழ்வை அழிப்பதற்கு என்ன வழியைக்கடைப் பிடிக்கவேண்டும்?சமூகத்திலுள்ளஎற்றத்தைஅழித்துவிடுவதாசமூகத்தில்அநியாயமும்கொடுமையும்செய்கிறர்கள் என்று கருதப்படுபவரை இம்சை வழியால் அழித்துவிட வேண்டுமா? சிலர் தம் அறியாமையால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வைப் பேணுகின்றனர். வேண்டுமென்று சுயநலத்தால் பேணுபவரும் பிறிதொரு வகை அறியாமையாலாயே பேணுகின்றனர். இருபாலாரும் இரங்கப்படத்தக்கவரே.

சற்றுச்சிந்தித்துப் பார்ப்போமானல் இன்னுமொரு உண்மையை நாம் காணலாம். எவ்வாறு பொருளியல் வாழ்வில் பொருள் வளம் குன்றினவர்பால் நம் மனம் இரங்கிப் பரிதாபப்படுகின்றதோ அவ்வாறே பண்புநலம், கருணை நலம் இல்லாதார் மாட்டும் நாம் இரங்கவேண்டும். அநியாயத்தைக் கண்டு நம் மனம் பொங்கியெழ வேண்டுமே ஒழிய அநியாயம் செய்பவர் மீது நாம் நம் பகைமையைச் செலுத்தக் கூடாது. அதுபோலவே தீமையை ஒழிக்கப் பாடுபட வேண்டுமே ஒழிய தீமை செய்கிறவரை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று நினைக்கக் கூடாது.

ஏலவே கொடுமை செய்கிறவர்களின் இம்சை ஒரு பக்கம் நிலவுகின்றது. அநியாயம் செய்கிறவர்கள் என்று கருதப்படுபவர்களை ஒழிக்க வேண்டுமென்ற ஒரு பிழையான கருத்தினுலும் உலகில் இம்சை தாண்டவமாடுகின்றது. பிற் கூறியதில் இரண்டு பிழைகள்உள. ஒன்று தீமை செய்பவர் என்று கருதப்படுபவர் உண்மையில் தீமைசெய்கிறரா? அறிவறிந்து அப்படிச் செய்கிறரா. என்பது பற்றி நாம் நிச்சயமாகச் சொல்லமுடியாது. இரண்டாவது தீமைசெய்பவரும் நம்மில் வேறல்லர், நாம் வாழும் சமூகத்தின் ஒரு உறுப்பினர் என்பதை நாம் உணர வேண்டும். எவ்வாறு பொருளில்வறியவர்க்கு இரங்குகிறேமோ அவ்வாறு அருளில் வறியவர்க்கும் நாம் இரங்குதல் வேண்டும். இங்குதான் சர்வோதயம் நமக்கு வழிகாட்டுகின்றது.

எல்லோரும் வாழ வேண்டும். தாழ்த்தப்பட்டவர், பின்தங்கியவர், நசுக்கப் பட்டவர் எல்லோரும் வாழ வேண்டும். அது போல் தீமை செய்வதில் உழல்பவர், கொடுமையை அறியாமலும் அறிந்தும் செய்பவர் எல்லோரும் வாழ வேண்டும்.

சர்வோதயம் என்பது உணவு, உடை, உறையுள் ஆகிய வசதி குறைந்தவர்களை மட்டும் நோக்கி எழுந்த ஒரு குரல் அன்று. ஒழுக்கம் சீலம், அறம் முதலியவற்றில் குறைந்தவர்களையும் நோக்கி எழுந்த குரல் என்று கொள்ள வேண்டும். அநீதியையும் அநீதி செய்பவனையும் சர்வோதயம் பிரித்தறிய வேண்டும். அநீதி செய்பவனை அநீதியை விட்டுத்திருந்தும்வழியில் சர்வோதயத்தின் போரட்டமோபணியோ இயங்க வேண்டும். அப்பொழுது தான் சர்வோதயம் நிறைவானதாகின்றது.

இந்தப் பெரிய உண்மையை அரசியல் வாதிகள் உணராமையால் தான் கட்சிப்பூசல்கள் போட்டிகள், வன்முறைச் செயல்கள் எழுகின்றன.

இன்னும் உலகம் முரண்பாடு, பிணக்கு என்ற முறையிலேயே பொருளியலிலும் சமூகவியலிலும் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பர் பலர். இது ஓர் உலகப்பொது விதியாய் இன்று எங்கும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. ஆயின் இதனினும் பழமையான விதி ஒன்றுள்ளது. அது தான் இரண்டற்ற அத்வைதநிலை. உலகில் இரு பண்புகள் என்றும் மோதுதிக் கொள்கின்றன என்று சித்தாந்தம் வகுப்பதை விட்டு உலகம் இரண்டற்றது என்று நாம் கொள்வோமே யானல், முரண்பாடும் பகைமையும் நீங்கியாவரையும் அன்பால் பிணிக்கும் ஒரு சமூதாயத்தை நாம் காண்போம். இந்த வழியில் அமைந்த சர்வோதயம் அரசியல் வாழ்விலும், சமூகத் தொண்டிலுமிருந்து வன்மைநெறிகளையும் இம்சையையும் நீக்கும்.

இ.இரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதய நிகேதனமும் அதன் தொண்டும்

காந்தி நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக கொழும்பு-இரத்மலானையில் நிறுவப்பெற்றுள்ள சர்வோதய நிகேதனத்திற்கு வருகை தந்த பெரியார்கள் வழங்கிய ஆசி உரைகளிற் சில வருமாறு;-

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்



கதிரவன்ஒளி-எங்கும் பரவி எல்லோருக்கும் இன்பம் தருகிறது. அது போல எல்லோருக்கும் இன்பம் தரும் நெறி சர்வோதய நெறி; இந்நெறியைக் காண அமைந்துள்ள-இந்த நிகேதனத்தையும்-தூய தொண்டர் தம்பிப்பிள்ளையையும் வாழ்த்துகின்றோம்.

செனெட்டர்

## சோ. நடேசன்

இன்றைக்கு காந்தி சேவா சங்கத்தில் ஈடுபட்ட சில நண்பர்களைச் சந்தித்து அவர்களின் ஊக்கத்தையும், எடுத்தவேலையை கொண்டு நடத்துவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் கண்டுமிகமகிழ்ந்தேன். இப்பேர்ப்பட்ட நண்பர்கள் இருக்கும் வரையில் எங்கள் நாட்டைப் பற்றி நாங்கள் சிறிதேனும் பயப்பட வேண்டியதில்லை. காந்தி சேவா சங்கத்தின் பெரும் வேலைகைகூடி அவர்கள் என்றும் பெரும் வேலைகளில் ஊக்கமெடுப்பார்கள் என நம்புகிறேன்.

## காதிராஜன்



சம்பத்துதானம் சாதனதானம் உழைப்புதானம் என்ற பலவான தானங்களின் விளைவாக உருவாகிய, சிரமதானத்தின் சின்னமான இந்த விசாலமான மண்டபத்தில்-மாணவமணிகள் சூழ, மற்றும் பலஅன்பர்கள் கலந்து கொண்டு பங்குபற்றும், இந்தக் கருத்தரங்கு நிகழ்ச்சியும் காலையில் வெயில் நேரத்திலும் சலியாது நின்று உடலுழைப்பின் மூலம் சுற்றியுள்ள நிலத்தை விளைநிலமாக்க உதவிய இளங்காளைகளுடன் கலந்து சிறிது சிரமதானத்திலும் பங்கு பெறும் வாய்ப்பும் என்றும் நீங்காத நினைவாக இருக்கும். காரணம், மேலை நாட்டு நாகரீகப் போக்கில் கல்விச் சிந்தனை மூழ்கி, உடலுழைப்பைத் தவிர்க்கவழிகளைத் தேடித்திரியும் உலகில், உடலுழைப்புக்கு உரியமதிப்பளிக்கவேண்டும் என்ற எண்ணம் சிறுவர் உள்ளத்தில் உதயமாகவும் ஊக்கம் ஏற்படவும் உதவும் வாய்ப்பை இன்றைய நிகழ்ச்சிகள் தாங்கி நிற்பதேயாகும்.

சர்வோதயபாத்திரங்களை பரப்பி, நல்ல காரியங்களுக்கு ஊக்கமளிக்கும் பலநூறுஅன்பர்களை ஆதரவாளர்களைக் கொண்டு இயங்கும் உங்கள் எண்ணம் வெற்றி பெற வேண்டும் என்று என் மனமார விரும்புகிறேன். இது ஆழ்ந்து பரந்து விரிந்து வியாபித்து நிலைத்துச் செயலாற்றி வர ஆண்டவன் அருள் புரிக என்வும் பிரார்த்திக் கின்றேன்.

சர்வோதய இயக்கம் பரவ சர்வோதய பாத்திரம் பெருகுமாக.

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1970 மார்ச்மாதம், வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 15 | 76 |
| சர்வோதயபாத்திரம் | 25 | 10 |
| சம்பத்துத்தானம் | 34 | 00 |
| விடுதிக்கட்டணம் | 40 | 00 |
| காந்தீயம் | 435 | 50 |
| அரிசி | 53 | 50 |
| விளம்பரம் | 75 | 00 |
| மொத்தம் | 678 | 86 |
| **செலவு** | | |
| உணவு | 50 | 98 |
| பிரயாணம் | 17 | 25 |
| தபால் | 5 | 00 |
| சலவை | 2 | 80 |
| சலூன் | 2 | 00 |
| மாணவர் செலவு | 12 | 56 |
| வெளிச்சம் | 21 | 30 |
| அச்சகம் | 202 | 00 |
| காந்தியம் | 15 | 00 |
| நானுவிதம் | 1 | 90 |
| வயித்தியம் | | 40 |
| கமம் | 1 | 45 |
| கோகுலம் | 15 | 90 |
| மொத்தம் | 348 | 54 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதயப் பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரங்களில் நாள் தோறும் பிடிஅரிசியும் காசும்இட்டு இதனை மாதந்தோறும்சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைக் கடந்தஇதழ்களில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மாடிவீடுகள், பம்பலப்பிட்டி

திரு எஸ்.வி. மூர்த்தி
டாக்டர் ரி.ஏ. சுப்பிரமணியம்
திரு.ஆர். மகேஸ்வரன்
திரு. ஆறுமுகம்
திரு.என்.டி.அமரவர்த்தன
திரு.பி.எச்.டி. மென்டிஸ்
திரு. ஆர். சிறிகாந்தன்
திரு. வி.இராசசேகரம்
திரு. செல்லத்துரை
திரு.ஆர்.நல்லதம்பி
திரு.இ.பி. இரகுநாதன்
திருமதி. சில்வா
திரு. சபாபதிப்பிள்ளை
திரு. சுப்பிரமணியம்
திரு. சிவராஜன்
திரு.ஆர். ராஜசிங்கம்
திரு. சேதுகாவலர்
திரு. நடராசா
திரு.குணரத்ன

ஜம்பட்டாவீதி, கொழும்பு

திரு. அந்தோனிலாசர் பர்னாந்து
திருமதி. சுப்பம்மாள்
செல்வி. சரஸ்வதி
செல்வி. கமலா
செல்வி. செல்வம்

PEOPLE'S ACTION
SARVA SEVA SANGA
NEWS LETTER
PUBLISHED ON THE FIRST
DAY OF EVERY MONTH
SARVA SEVA SANGH
RAJGHT : VARANASI 1
INDIA
IN CEYLON
Gandhi Nilayam
Uruthirapuram

## செய்திகள்

பம்பலப்பிட்டி — கனிஷ்ட இந்துக் கல்லூரி சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 75 கொத்து அரிசியும் 10 ரூபா 60 சதமும் கிடைத்துள்ளது.

★ ★ ★ ★ ★

இலங்கை-காந்தி நூற்றாண்டு விழா தேசீயக் குழு காந்தீயம் பத்திரிகைக்கு ரூபா400 நன்கொடை அளித்துள்ளது.

★ ★ ★ ★ ★

கிளிநொச்சி, உருத்திரபுரம்-காந்தி நிலையத்தில் பால் பண்ணையைத் தொடங்குவதற்கு உதவியாக, கொழும்பு பிரபல வர்த்தக நிறுவனமாகிய கே. எம். காளியப்பாபிள்ளை அன்ட் கம்பனிலிமிட்டெட் 1500 ரூபா நன்கொடை வழங்கியுள்ளது.

## வரப்பெற்றோம்

காந்தி பாமாலை
காந்தி தரிசனம்
காந்தி போதனை
காந்தீயக் கதைகள்
மாணுக்கரின் காந்தி
இவை ஐந்தும் காந்தி நூற்றாண்டு விழா வெளியீடுகள்

அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு 13 [இலங்கை]

---

பனைச்செல்வம்
(திங்கள் வெளியீடு)
தனிப்பிரதி சதம் 50
சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம்
52, தெங்கு ரெட்டிதெரு
எழும்பூர், சென்னை 8.
இலங்கையில்:
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

---

'காந்தீயம்'

சம்பந்தமான சகல விபரங்களுக்கும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
சர்வோதய நிகேதனம்
212, 10 ஆவது குறுக்குத்தெரு,
இந்துக்கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை [இலங்கை]

## இலங்கையில் கதர் நிதி

1926 ஆம் ஆண்டு இளைஞர் காங்கிரஸ் இணைச் செயலாளராகிய ஜ. பி. துரைரத்தினமும் நானும் ஆலோசித்து மகாத்மாவை இலங்கைக்கு வரும் படிஅழைப்பதெனத் தீர்மானித்தோம். அவ்வருடம் யூன்மாதம் மகாத்மாவுக்கு நேரடியாக அழைப்பு விடுவதற்கென நான் இந்தியாவுக்குச் சென்றேன்.

சென்னையை அடைந்து அவர் தரிசனத்துக்கு அனுமதி கோரி எழுதியகாம் அனுமதி கிடைத்தது. மகாத்மாவின் மெய்காப்பாளராகிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியர் தமிழ்நாட்டு விஜயத்துடன், இலங்கை விஜயத்தையும் சேர்க்கிருந்தார். காந்தி அப்பொழுது தரித்திரநாராயணனுக்கு கதர் நிதிக்குப் பணம்சிரட்டிக் கொண்டிருந்தார்.

அவருடன் உரையாடியபொழுது, அதைவிட்டு வருவதற்கு அவகாசமில்லையெனவும் இலங்கையிலும் கதர் நிதிக்கு பணஉதவி கிடைக்குமெனின் தாம் வருவதாகவும் கூறினார். நான் காந்திஜீயின் இலங்கை விஜயத்தில் ஆர்வமாயிருந்ததனால், இலங்கையிலும் பண உதவி கிடைக்குமென உறுதியளித்தேன். மகாத்மாவின் இலங்கை விஜயத்தின் போது, அவரது கதர் நிதிக்குப் பெருமளவு பணஉதவி கிடைத்தது. மகாத்மாவுக்கு அளிக்கப்பட்ட பரிசுகள் அனைத்தும் கதர் நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டன.

—எஸ். எச். பேரின்பநாயகம்
காந்திகாட்டிய வழி
நூற்றாண்டு மலர்,
யாழ்ப்பாணம்.

---

### அறிவிப்பு

காந்தி புகைப்பட, சர்வோதய இலக்கிய கண்காட்சியை நடத்த விரும்பும் அன்பர்களும், பொது நிறுவனங்களும் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கௌரவ நிர்வாகி,
சர்வோதய நிகேதனம்,
இந்துக்கல்லூரிச்சதுக்கம்,
இரத்மலானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாவைத்தொடர்ந்து ஆக்கப்பணி

காந்தி அடிகளின் நூற்றாண்டு விழா ஈழத்திலும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாராளுமன்ற மேல்சபைத் தலைவர் கௌரவ ஏ. இரத்தினயக்கா அவர்கள் தலைமையில் உருவாகிய 'தேசியவிழாக் குழுவும், மாவட்ட அரசாங்க அதிபர்கள் தலைமையில் தோன்றிய மாவட்ட விழாச்சபைகளும், அகில இலங்கைக் காந்திசேவா சங்கமும், சர்வோதய சிரமதான சங்கமும், நாடெங்கும் மகாத்மாவின் ஞாபகார்த்தக் கொண்டாட்டங்களை மிகவும் செம்மையாக நடத்தின.

அண்ணல் காந்தி அடிகளுக்கு அஞ்சலி செலுத்துவதாக மட்டும் அமையாமல், அவருடைய தத்துவ மகிமை பற்றிய பிரசாரம் பரவலாக நிகழ்வதற்கும், அவருடைய தத்துவ அடிப்படையில் ஒரு சில நிர்மாணப் பணிகள் உருப் பெறுவதற்கும், இவ் விழா நிகழ்ச்சிகள் ஏதுவாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது.

விழா ஆண்டில் பாரதப்பெரும் பிரமுகர்கள் சிலர் இங்கு போந்து கொண்டாட்டங்களில் கலந்து கொண்டமையால், விழா நிகழ்ச்சிகள் ஏற்றம் பெற்றன; மக்கள் மத்தியில் காந்தீயக் கொள்கையில் தெளிவும் ஆர்வமும் கூடப்பெருகி இருப்பதைக்காண்கின்றோம்.

மக்கள் உள்ளங்களில் பொங்கிய காந்தீய அபிமான உணர்ச்சியை மங்கவிடப்படாது; அது வற்றிப்போனால், காந்தீய நெறிக்குப் பெரியதோர் இழப்பு ஆகும். ஆகவே, ஆர்வம் கொண்ட இளைஞர்களை உடனடியாக ஈடுபடுத்தக்கூடிய ஒரு ஆக்கப்பணியை உருவாக்க வேண்டியதின் அவசியத்தைஉணர்ந்துகொண்டது எங்கள் காந்தி சேவா சங்கம்.

'கதர் இன்றிக் காந்தீயம் இல்லை' ; 'கதரே ஏழைகளின் விமோசனம்' ; 'கதரே காந்தீயப் பொருளாதாரத்தின் புனித அடித்தளம்'; 'ராட்டையே காந்தீயதித்ன் ஆக்க நெறிச் சின்னம்', என்ற உரத்த கோஷங்களைப் பொழிந்து கொண்டு, வில்லேந்திய வீர ராகவன் வந்தாற்போல, எங்கள் மத்தியில், அண்மையில், வந்து சேர்ந்தார் வீரத்தியாகி ஏ.என் ராஜன் அம்பர் ராட்டையும் கையுமாக.

திரு. ராஜன் அவர்கள் இந்த நாட்டில் தங்கியது மிகச் சில நாட்களே; எனினும் முக்கியமான பல ஊர்களுக்குச் சென்றார். சென்ற இடமெல்லாம் அம்பர் ராட்டையைச் சுழற்றிக் காட்டினர். ஆற்றல் மிக்க தனது நாவையும் சுழற்றினர்; கண்டோர் கேட்டோர் அனைவரையும் அம்பர் ராட்டையில் மோகம் கொள்ள வைத்தார்.

முதலியார் செ. சின்னத்தம்பி
தலைவர்
அகில- இலங்கை காந்தி சேவா சங்கம்
உருத்திரபுரம்

அம்பர் ராட்டைக்கு நமது நாட்டுப்புறங்களில் இடம் உண்டு என்பதைப் பலர் உணர்ந்து கொண்டனர். கிராமப் பொருளாதார மலர்ச்சிக்கென உழைக்கும் அரசாங்க அதிகாரிகள் கூட அம்பர்ராட்டையை ஒரு கிராமிய வளம்தரு சாதனமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்குத் திரு. ராஜன் அவர்களுடைய பிரசாரம் பயன் தந்திருக்கிறது.

எனவே, அக்கராயனில் காந்திக் கிராமம் அமைத்தல் தர்மபுரத்தில் கஸ்தூரிபாய் இல்லம் அமைத்தல், இரத்மலானையில் சர்வோதய நிகேதனம் அமைத்தல் ஆகிய நீண்டகலாத் திட்டங்களோடு, கதர் உற்பத்தி இயக்கம் ஒன்றை உடனடியாக உருவாக்க வேண்டும் என்று எங்கள் காந்தி சேவா சங்கம் தீர்மானம் செய்துள்ளது.

இந்த இயக்கத்திற்கு வேண்டிய உபகரணங்களையும், அம்பர்ராட்டையில் பயிற்சி அளிக்கவல்ல ஊழியர்கள் சிலரையும் இந்தியாவிலிருந்தே பெறவேண்டியிருப்பதால் இந்தியாவிலுள்ள காந்தீய நிர்மாண ஊழியத் தலைவர்கள் சங்கங்கள் மூலம் வேண்டிய உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் விநோபாஜி அவர்கள் தென்னிந்தியாவிற்கு வர இருக்கிறார்கள்; அவர்களுடைய தரிசனத்தின் பொருட்டும், காந்தீய நிர்மாணப்பணி நிலையங்களைப் பார்வையிடும் பொருட்டும், எங்கள் சங்கத்தின் கொழும்புக் கிளைச்செயலாளர் திரு. எஸ். கே தம்பிப்பிள்ளை அவர்கள் இந்தியாவிற்குப் பயணம்செய்வார்கள். அப்போது, கதர்த் துறையில் ஈடுபட்ட சங்கங்களோடும், தலைவர்களோடும் நேரடித் தொடர்பு கொண்டு, எங்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்வார்கள்; அங்குள்ள சங்கங்களும் தலைவர்களும் நிறைவான உதவிகளைத்தந்து எங்கள் முயற்சியை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

## சம்பத்துத் தானம்

சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| திரு. ஆ. செல்லத்துரை பிரதிநிதிகள்சபை, கொழும்பு. | 5 | 00 |
| திரு. சிசு. நாகேந்திரன் பிரான்சிஸ் வீதி கொழும்பு. 6 | 18 | 34 |
| திரு. இ. இரத்தினம் காலிவீதி கொழும்பு. 4 | 10 | 00 |
| திரு. எஸ் இராசையா விவேகானந்தவீதி கொழும்பு. 6 | 2 | 00 |
| திருமதி. ம. குமாரசாமி மல்வத்தஅவென்யூ நுகேகொட. | 10 | 00 |
| திரு. த. குமாரசாமி இரத்னகர இடம் தெகிவளை | 5 | 00 |
| ஓர்அன்பர் | | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஜெயப்பிரகாஸின் பாராட்டு

காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டி இலங்கைக்கு வருகை தந்த சர்வோதய தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாஸ் நராயன் அவர்கள் காந்தி சேவா சங்கத்தின் காந்திய- சர்வோதய பணிகளைப் பார்வையிட்டபின் வெளியிட்ட கருத்து வருமாறு;



அகில இலங்கை காந்தி சேவா சங்கம் சென்ற பல ஆண்டுகளாகப், பாராட்டுக் குரிய சிறந்த சமூகத் தொண்டு ஆற்றி வந்திருக்கின்றது; மகாத்மா அவர்களின் வாழ்க்கை தத்துவம், ஆகியவற்றிற்குச் சிந்தனைச் செழிப்பு மட்டுமன்றி இயன்ற அளவு செயற் செழிப்பும் ஊட்டி வந்திருக்கின்றது.

சிறந்த தலைவர் களைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டமையாலும் முழுநேர ஊழியராக திருவாளர் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களைப் பெற்றமையாலும், திறமை சான்றதும் ஒளிமிக்கது மாகிய தலைமையில் இச் சங்கம் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'காந்திக்கிராமம்' கஸ்தூரிபாய் இல்லம்; ஆகிய புதிய இரு பெரிய நிறுவனங்களை உருவாக்க முற்படும் முகமாக தனது தொண்டின் எல்லையை இப்போது விரிவாக்கிக் கொண்டுள்ளது இச் சங்கம்.

இலங்கா சர்வோதய சிரமதான இயக்கத்தோடு ஒன்று சேர்ந்து வினோபா அடிகளாரின் பூதான சிரமதான தத்துவத்தைப் பரப்பும் சீரிய கைங்கரியத்தில் இச் சங்கம் ஈடுபட்டு உழைத்து வருவதும் பாராட்டுக் குரியது.

யானும் என் மனைவியும் இம்முறை இலங்கை வந்திருந்த போது இச்சங்கத்தோடு பழகி உறவு கொள்ள இரண்டு நாட்கள் வாய்க்கப் பெற்றமைக்கு மிகவும் மகிழ்கிறேன்

எங்கள் இலங்கை விஜயத்தை இன்பகரமாக்கிய சங்க நண்பர்களுக்கு எங்கள் நன்றியும் மரியாதையும்.

ஜெயப்பிரகாஸ் நாராயன்
11·1.69


**இளைஞர்களே !**

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?

- ★ கமம்
- ★ நெசவு
- ★ தும்பு
- ★ அச்சு
- ★ தையல்
- ★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.


## தமிழகத்தில் சர்வோதயம்

சர்வோதயம் என்ற சொல்லில் மனிதனின்தேவை அத்தனையும் அடங்கியிருக்கின்றது. மனிதனின் சகல தேவைகளுக்கும் விடிவு காண்பதுதான் சர்வோதயம். சர்வோதயம் சூரியஒளி போல் எல்லோரிடமும் சமமாகப் பரவவேண்டும். அணுசக்திபயம்மிகுந்த இக்காலத்தில் சர்வோதயம் பரவுமானால் அணுவினால் ஏற்படக் கூடிய தீமையை ஒழித்து விடலாம்.

சர்வோதய இலட்சியத்தை முதலில் தோற்று வித்த பெருமை தமிழ் நாட்டையே சாரும். நாலடியார் பாடல்களை ஆராயும் பொழுது அதில் சர்வோதயதத்துவம் நிறைந்திருப்பதைப் பார்க்கலாம். நாவுக்கரசரின் ''இரப்பவர்க்கு ஈயவைத்தாய்'' என்ற பாடலில் சர்வோதயதத்துவமே அடங்கியுள்ளது. இப்பாடலை ரஷ்ய மொழியில் பெயர்த்து அதன் கீழே கார்ல் மார்க்ஸ் என்று பெயர் போட்டிருந்தால் மதிப்பு முற்றிலும் வேறாக இருந்திருக்கும். சங்க கால இலக்கியங்களிலும் சர்வோதயதத்துவம் மிளிர்ந்து காணப்படுகின்றன. ஆகவே இந்தத் தத்துவம் வெளிநாட்டிலிருந்து வந்த புதிய சரக்கு அல்ல. இவ்வித மேலான தத்துவத்தைப் பெற்ற தமிழர்களாகிய நாம் பெரும் பாக்கிய சாலிகள்.

[இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது சர்வோதய மகாநாட்டை தவத்திருகுன்றக்குடி அடிகளார்திறந்துவைத்துப் பேசியது.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் ரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன்கொழும்புமெய்கண்டான் அச்சக லிமிட்டெட்டில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org